பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 15 புதன்கிழமை 29.01.2025 கதிர் 082

**இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவகாரம்அடுத்தகட்டமாகநீதிமன்றப் படியேறும் நிலையை நோக்கி நகரும் போன்று தெரிகின்றது. மாணவர்கள் ஒழுக்காற்று ☞2

## வலுவான வேலைத் திட்டமும் இல்லை தொலைநோக்குப் பார்வையும் இல்லை

### ஆளும் தரப்பைச் சாடுகிறார் எதிர்க் கட்சித் தலைவர்

நாட்டின் தற்போதைய நிலையைப் பார்க்கும்போது மக்கள் எதிர்பார்க்கும் சேவைகள் நிறைவேற்றப்படவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாது சொல்வதைச் செய்யாத போக்குக் காணப்படுகின்றது. மக்களுக்கு



நிறைவேற்ற முடியாத எதிர்பார்ப்புகளை வழங்கி விட்டு திணறி வருகின்றனர். வலுவான வேலைத்திட்டமும் அதற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வையும் இந்த ஆளும்தரப்பிடம் இல்லை ☞2

## எந்தவொரு விசாரணையிலும் அரசியல் தலையீடுகள் இல்லை

### சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

முன்னெடுக்கப்பட்டுள்ள எந்தவொரு விசாரணையிலும் அரசியல் தலையீடு ☞2

## சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்த கொள்கை முடிவுகள் தேவை

### பிரிட்டன் அயலுறவுச் செயலரிடம் கஜேந்திரகுமார், சிறீதரன் வலியுறுத்து

பிரித்தானியாவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளும்ஒன்றிணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதற்குரிய கொள்கை மட்டத்திலான தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும்



என்று பிரித்தானியாவின் ☞2

# யாழ். பல்கலைக்கழக பிரச்சினையில் கல்வி அமைச்சு விரைவில் தலையீடு

## ஏற்கனவே அறிக்கை கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு விரைவில் இந்த விவகாரத்தில் தலையிட்டு தீர்வினை வழங்கும். எனவே வேலை நிறுத்தங்களில் ஈடுபடாது கல்வி செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைக்குமாறு அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து அறிக்கையொன்றைக் கோருவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக் கப்பட்டது. கல்வி அமைச்சு வெகு விரைவில் இவ்விவகாரத்தில் தலையிட்டு பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கும். எனவே எவ்வித வேலை நிறுத்தங்களும் இன்றி பல்கலைக்கழக நடவடிக்கைகளை தொடர்ச்சியாக ☞2

## கொள்கை இணக்கமின்றி கட்சிகளின் ஒன்றிணைவை சிந்திக்கவே முடியாது

### கஜேந்திரகுமார் தெளிவுபடுத்தல்

கொள்கை ரீதியான இணக்கப்பாடு இல்லாமல் கட்சிகள் ஒன்றிணைவது தொடர்பில் சிந்திக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று உள்ளூர் செய்தியாளர்களுடன் தமது அண்மைக்காலப் பணி குறித்துக் கலந்துரையாடியபோதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பு, ஒற்றையாட்சி முறைமையாக அமைய போகிறது. நாடாளுமன்றில் அநுர தரப்புஅதீதபெரும்பான்மையுடன் உள்ளது. அவர்களுக்கு எமது தரப்பின் ஆதரவு ☞2



## சிப்பாயின் துப்பாக்கி இயங்கியதால் இந்திய மீனவர் இருவருக்கு காயம்

### இப்படி விளக்கம் சொல்கிறது கடற்படை

இலங்கைகடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித்த 13 இந்திய மீனவர்கள் மீன்பிடிப் படகொன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்களை கைது செய்வதற்கு கடற்படையினர் நடவடிக்கை எடுத்த போது, கடற்படைச் சிப்பாயின் ஒருவரின் துப்பாக்கி இயங்கியதில் இரு மீனவர்கள் காயமடைந்துள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து கடற்படை ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பிரதேசத்துக்கு அப்பால் திங்கட்கிழமை இலங்கைக்கு உரித்தான கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்துமீன்பிடித்தஇந்திய மீன்பிடிப் படகுகள் ☞8

## மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு இந்தியா கண்டனம்

இலங்கைக் கடற்பரப்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியமைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஆணையகம் இது தொடர்பில்விடுத்துள்ள ஊடகஅறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நெடுந்தீவுக்கு அருகாமையில் நேற்று அதிகாலை 13 இந்திய மீனவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளின்போது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். குறித்த மீன்பிடிப் படகிலிருந்த 13 மீனவர்களில் இருவர் ☞8

## மாணவர்களுக்கு மீண்டும் விதிக்கப்பட்டது வகுப்புத் தடை

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை மற்றும் கற்றல் நடவடிக்கைப் பாதிப்பைத் தொடர்ந்துமாணவர்களுக்குமீண்டும் வகுப்புத் தடை விதித்துள்ளார் துணைவேந்தர்.

அதேநேரம் கலைப்பீடாதிபதி மீண்டும் தனது பதவிக்குத் திரும்பும் வகையிலான சூழல் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கும் உறுதியளித்துள்ளார்.

துணைவேந்தரின் உறுதி மொழி பேரவையால் அங்கீகரிக் கப்படவேண்டும் என்று ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் ☞8

## பேரீச்சம் பழத்திற்கான விசேட வரி குறைப்பு

பேரிச்சம்பழத்திற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தக வரியைக் குறைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது ☞2

# ஜே.ஆர். முதல் அநுர வரையில் தமிழினப்படுகொலைக்கு எவருமே நீதி தரவில்லை

இந்த நாட்டில் ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்த காலம் தொடக்கம் இன்று அநுரகுமார திசநாயக்க காலம் வரையிலும் 37வருடத்தில் பல ஜனாதிபதிகளைக் கண்டாலும் இனப்படுகொலைகளுக்கு நீதியைத் தராத நிலையிலேயே நாங்கள் நினைவேந்தல்களை செய்துவருகின்றோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தையே உலுக்கிய படுகொலைகளில் ஒன்றாக கருதப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலையின் 38ஆவது நிறைவு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மகிழடித்தீவு சந்தியில் உள்ள படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைதமிழ்அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாளுமன்ற உறுப்பினர் சிறிநாத், படுகொலைசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர். அங்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் உயிர்நீர்த்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

28.-01.-1987 மற்றும் 12.-06.-1991ஆகிய காலப்பகுதிகளில் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மகிழடித்தீவு இறால் பண்ணை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் 239 பேர் படுகொலைசெய்யப்பட்டனர். சிறுவர்கள்,பெண்கள் மற்றும் முதியவர்களும் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். இவர்களை நினைவுகூரும் வண்ணமே, கொக்கட்டிச்சோலைபடுகொலைநினைவுத்தூபி 2,000ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

''1987ஆம் ஆண்டு இதே தினத்தில் 33ஆண்டுகளுக்கு முன்புபடுவான்கரைபெரு நிலத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலையில் 157க்கும் அதிகமானவர்கள் படுகொலைசெய்யப்பட்டார்கள்.அதனைவிட கணக்கெடுக்கமுடியாத வகையில் படுகொலைகள் முன்னெடுக்கப்பட்டன. பெரும் இனப்படுகொலையொன்று முன்னெடுக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் வரையில் இடம்பெற்றது.

கொக்கட்டிச்சோலை படுகொலையென்பது அன்றைய காலகட்டத்தில் சர்வதேச ரீதியாக பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. இன்று 38ஆவது ஆண்டினை நினைவுகூரும்போதுகூட படுகொலை செய்தவர்கள் மீதோ அதன் பின்னாலிருந்தவர்கள் மீதோ எந்தவித விசாரணைகளும்முன்னெடுக்கப்படவில்லை” என்று அரியநேத்திரன் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# மாவையின் நிலையறிந்து நாமல் ராஜபக்ச கவலை

தமிழ்அரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் அவர் விரைவாகவும்முழுமையாகவும்குணமடைய மனதார பிரார்த்திக்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது டுவீட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வீட்டில் தவறி விழுந்த நிலையில் தலையில் நரம்பு வெடிப்பு ஏற்பட்டதால் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக நேற்று சேர்க்கப்பட்டார்.

## இனி இது .....

நடவடிக்கையில் நிர்வாகத் தரப்பில் பல குறைபாடுகள் காணப்படுவதால் அவர்களின் கல்வி நடவடிக்கை தடுக்கப்பட்டது தொடர்பில் சட்ட உதவியை நாடுவது குறித்து அவர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

மாணவர்கள் தவறிழைக்கும்போது அவர்களுக்குதண்டனைவிதித்து அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் கல்வியைத் திறம்படத் தொடர்வதற்கான வழியை ஏற்படுத்தவேண்டிய பல்கலைக்கழக நிர்வாகம், ஒழுக்காற்று விசாரணைகளைத் தாமதப்படுத்துவது, அவற்றின் மீது அக்கறையின்றி இருப்பது போன்ற தவறுகள் மூலமே இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி இருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் கருதுகின்றது.

இந்தத் தவறுகளுக்குப் பொறுப்பேற்கவேண்டியவராகக் கடைசியில் துணைவேந்தரின் தலையே உருளும் நிலை ஏற்படலாம்.

..............................

வடக்கில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அடுத்த தேர்தல்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான முயற்சிகள் முக்கி முனகி நகர்வதைப் போன்றே தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கி மக்கள் சக்திக்கும் இடையிலான ஒரு புள்ளி நகர்வுப் பேச்சுக்களும் பெரிய முன்னேற்றங்கள் இன்றி நகர்வதாகத் தெரிகின்றன.

அடுத்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக குறைந்தபட்சம் இரு கட்சிகளையும் ஒரே கூட்டணியிலாவது கொண்டுவந்துவிட வேண்டும் என்று சிலர் முயற்சிக்கிறார்கள். ஆனால், அது தொடர்பிலான முன்னேற்றங்களுக்கு வழியைக் காணவில்லை. இப்போதைக்கு இருதரப்பினரும் உள்ளூராட்சிசபைத்தேர்தல் மேடைகளைப் பகிர்ந்துகொள்வது என்கிற ஒரு இணக்கப்பாட்டை நெருங்கியிருக்கிறார்களாம். அதாவது தனித்தனியே போட்டியிட்டால்கூட, ஒரே மேடையில் பரப்புரை செய்வது என்கிற வகையில் இந்த யோசனை ஆராயப்பட்டு வருகின்றது.

இதுவும் எவ்வளவு தூரத்திற்கு சாத்தியமாகும் என்று சொல்லமுடியாவிட்டாலும் தமிழ்க் கட்சிகளுக்கு இதிலிருந்து ஒரு புதிய யோசனை கிடைக்கலாம் என்பது மட்டும் நிச்சயம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்துச்செல்லுமாறு கோருகின்றோம்.

எந்தவொரு பிரச்சினைக்கும் வேலை நிறுத்தங்களுக்கும் செல்வதற்கு முன்பு எம்முடன் பேச்சு நடத்த முடியும். விரிவுரையாளர்களானாலும், மாணவர்களானாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எம்முடன் கலந்துரையாட முடியும். ஆளும்தரப்புடன் கலந்துரையாடுவதற்கு யாருக்கும்எவ்விததடைகளோகட்டுப்பாடுகளோ இல்லை.

கடந்த காலங்களில் பல்வேறு காரணிகளுக்காக வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதால் கல்வி கற்பதற்குரிய சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுள்ளன. எனவே பல்கலைக்கழக கட்டமைப்பில் எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தாமல் கல்வி செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அதற்கு தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்குவோம் - என்றார்.

## பேரீச்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படும் 200 ரூபா விசேட வர்த்தகப் பொருட்கள் வரி ஒரு ரூபா வரை குறைக்கப்படவுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் வரிக்குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம்களின் நுகர்விற்காக சவுதி அரேபியா 50 மெட்ரிக் தொன் பேரிச்சம்பழங்களை இம்முறையும் நன்கொடையாக வழங்கியுள்ளது. அவை கிடைத்துள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

## வலுவான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா, திவுலப்பிட்டிய அமைப்பாளர் எட்வர்ட் குணசேகர, திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று ஏற்பாடுசெய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

பேச்சுக்கள் நன்றாக இருந்தாலும் செயல் பலவீனமாகவும் மெத்தனப் போக்கிலும் காணப்படுகின்றன. மக்களின் எதிர்பார்ப்புகள் ஏமாற்றமடைந்துள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு மாற்று வாழ்வாதாரம் இந்த அரசிடம் இல்லை. மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஏற்படும்போது மாற்று வாழ்வாதார ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும், ஆனால் அவ்வாறான புதிய ஏற்பாடுகள் இந்த அரசிடம் இல்லை. பொருட்களுக்குக்கூடத்தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. அரிசி, தேங்காய்க்குகூட தட்டுப்பாடு இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்கள் கோரா விட்டால் மின் கட்டணம் 20 சதவீதத்தால்கூட குறைந்தபாடில்லை. இறக்குமதிப் பொருட்களுக்குக்கூட தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. மின்சார கட்டணம் 33 சதவீதம் குறைக்கப்படும் என்று கூறப்பட்டாலும்,இன்னும்எந்தமுன்னேற்றமும் ஏற்படவில்லை. மின்சார சபைக்கு அதிக இலாபம் கிடைத்தாலும் மக்களுக்கு அந்த இலாபம் கிடைத்தபாடில்லை. பொதுமக்களின் விமர்சனங்களுக்கு மத்தியில் 20 சதவீத மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்க தேர்தல்களின் மூலம் மக்களின் கருத்து புலப்படுகிறது. இன்று கூட்டுறவுசங்கத்தேர்தல்களின்மூலம்மக்களின் அபிப்பிராயம்வெளிப்படுத்தப்பட்டுவருகின்றன. மக்களின் எதிர்ப்பு ஆளும்தரப்புக்குச் சுமையாக மாறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். உர மானியத்தைக்கூட முறையாக வழங்க முடியாத அரசு, பரிசோதனைகள் இன்றி 328 கொள்கலன்களை சிவப்பு அறிவிப்புடன் விடுவித்துள்ளன.

அரசஉத்தியோகத்தர்கள்சம்பளஉயர்வை எதிர்பார்த்து இருக்கின்றனர். தனியார் துறையிலும் அரச சேவையிலும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக மக்களுக்காக என்றும் குரல் எழுப்புவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தோ- பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுச் செயலர் கத்தரின் வெஸ்ட்டிடம் நேற்று வலியுறுத்தினர்- யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் மற்றும் சிறீதரன்.

இவர்களுக்கு இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. கொழும்புக்கு வந்திருந்த பிரிட்டிஷ் அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கும்வருகைதந்தார். அவரிடம் பேசிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இலங்கை ஆளும்தரப்புக்களுக்கு இன்னும் அழுத்தம் தரப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

''இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அதற்கு அப்பால் எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை.எனவேஇவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் பிரித்தானியாவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளும் ஒன்றிணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதற்குரிய கொள்கை மட்டத்திலான தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும். அதனூடாக பொறுப்புக்கூறல் விடயத்தில் மாத்திரமன்றி, அரசியல்தீர்வுவிடயத்திலும் ஆளும்தரப்பு மீது மறைமுகஅழுத்தத்தைப்பிரயோகிக்கமுடியும்” என்று அவர்கள் தெரிவித்தனர்.

பதிலளித்த பிரிட்டிஷ் அமைச்சர் கத்தரின் வெஸ்ட், பொறுப்புக்கூறல் விடயத்தில் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கைத் தரப்பிலிருந்து குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. அதனால் இவ்விடயத்தில் இலங்கை ஆளும்தரப்புடன் பேணப்பட்டுவரும் அணுகுமுறையை தமது ஆளும்தரப்பு மீளாய்வுக்கு உட்படுத்தவிருப்பதாகவும், இதுகுறித்து அயலுறவுத்துறை மட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## கொள்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை. அந்த நிலையில் தமிழர் தரப்பில் நாடாளுமன்றில் உள்ள 19 உறுப்பினர்களில் குறைந்த பட்சம் 10 உறுப்பினர்களாவது ஒன்றிணைந்து அநுர தரப்புக் கொண்டுவரவுள்ள ஒற்றையாட்சியை எதிர்க்கவேண்டும்.

அதற்காகவே தமிழ் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து, வரவுள்ள அரசமைப்பு தொடர்பில் கலந்துரையாட முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம். உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பில் நாம் சிந்திக்கவில்லை. தற்போது வரவுள்ள அரசமைப்பு எவ்வாறு அமையவுள்ளது என்பது தொடர்பிலையே சிந்திக்கின்றோம்.

எங்கள் கட்சிகள் உறுப்பினர்கள் , கொள்கைகள் மீது பலருக்கும் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் பொதுவாக தமிழ் மக்களின் இருப்பை இல்லாதாக்கும் அரசமைப்பை தமிழ் மக்களாக நாம் ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டும்.

ஒற்றையாட்சி சிந்தனையோடு வரும் எந்த அரசமைப்பையும் ஏற்கமுடியாது. சமஷ்டித் தீர்வை மாத்திரமே ஏற்றுக்கொள்வோம். சமஷ்டி என்பதில் எந்த ஒளிவுமறைவும் இன்றி நேரடியாக சமஷ்டி தீர்வாகவே தீர்வுத்திட்டம் முன் வைக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டமானது, இதுவரையிலான தீர்வு திட்டங்களில் சிறப்பானது. அதனை வைத்து அதில்திருத்தங்களைக்கொண்டுவரவேண்டும். குறிப்பாக அதில் மலையக மற்றும் முஸ்லீம் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, அதனை முழுமைப்படுத்தவேண்டும். அவ்வாறு முழுமைப்படுத்தப்பட்டால் அதனை தமிழர்களின் தீர்வு யோசனையாக முன் வைக்க முடியும் என்று தெரிவித்தார்.

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படவில்லை என சட்ட மாஅதிபர் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

பல விசாரணை கோப்புகள் மீதான விசாரணைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சில கோப்புகளின் விசாரணைகளில் சிறியளவிலான தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், தாமதமடைந்துள்ள கோப்புகளின் விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழு செயற்பட்டு வருவதாக சட்ட மாஅதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளைத்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பிரதேசத்தில் திடீர் பரிசோதனை: பாவனைக்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு!

(பாறுக் ஷிஹான்)

சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் பொருள்கள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் சென்ற சுகாதார குழுவினர் இன்று சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றை பார்வையிட்ட வேளை உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும் உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

அதனை ஒட்டியதாக சாய்ந்தமருது சுகாதார




வைத்திய அதிகாரி காரியாலய சிரேஸ்ட மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் உணவு நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும், வெயிலில் வைக்கப்பட்ட மற்றும் வடிகான்கள் மீது வைக்கப்பட்ட உணவுகள் கைப்பற்றப்பட்டன.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, முறையான களஞ்சிய வசதி இல்லாத மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கைப்பற்றப்பட்டு





அழிக்கப்பட்டன. அதே போன்று சில உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

## புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்த காத்தான்குடி ஸாவியா மகளிர் பாடசாலை

(பாறுக் ஷிஹான்)

காத்தான்குடி ஸாவியா மகளிர் பாடசாலையில் 2024 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற 15 மாணவர்களை கௌரவிக்கின்ற நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ். எம். முஜீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக காத்தான்குடி கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ.ஜி.எம் ஹக்கீம் கலந்து கொண்டார்.

மேலும் அதிதிகளால் மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலையின் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.







## நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரணம் கைதடியில் அறிமுகம்

(சுபேசன்)

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரணம் திங்கட்கிழமை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நவீன ஐஸ் பதனீர் உற்பத்தி உபகரண அறிமுக நிகழ்வில் பனை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த அன்ரனி ராஜ் மற்றும் பொறியியலாளர் டிரோன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர்களின் 'ஸ்ரீட்றிச்ட் ரூ றெசோட் பவுண்டேசன்' அமைப்பின் நிதிப் பங்களிப்பில் மேற்படி நவீன உபகரணம் தயாரிக்கப்பட்டு பனை ஆராய்ச்சி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்டுபிடிப்பு தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்; -

புதிய தொழில்நுட்பத்துடன் இணைத்து பதனீர் உற்பத்தி செய்யக்கூடிய உபகரணம் தயாரிக்கப்பட்டு தயாரிப்பு நிறுவனத்தால் எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக அற்ககோல் அற்ற பதனீரை பெற முடியும்.

நவீன உபகரணம் ஊடாக பதனீரை உற்பத்தி செய்யும் போது குரங்கு மூலம் ஏற்படுகின்ற தாக்கத்தை குறைக்க முடியும். குரங்குத் தாக்கம் அற்ற இடங்களுக்கும் இதனை அறிமுகம் செய்து பதனீருக்கு பெறுமதி சேர்க்க தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் குறித்த பதனீருக்கு பெறுமதி சேர்ப்பதன் ஊடாக ஒருவருடம் வரை வைத்துப் பயன்படுத்த முடியும்.

இதனூடாக நீண்ட காலப் பிரச்சனைக்கு







தீர்வு கிடைத்துள்ளது.

பதனீர் குழந்தைகளுக்கு சிறந்த போசாக்கிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

மருத்துவ குணம் நிறைந்தது. குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது.

நவீன உபகரணத்தின் உதவியோடு அற்ககோல் அற்ற பதனீரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சிறந்த வருமானத்தை ஈட்ட முடியும்.

இந்துப் பதனீரானது உற்பத்தியின் போதே ஐஸ் ஜெல் ஊடாக குளிரூட்டப்படக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பனம்தொழிற்துறையைப்பொறுத்தவரை இவ்வாறான முயற்சிகள் மிகக் குறைவு. இந்த முயற்சி நிச்சயமாக வெற்றியளிக்கும்.

இவர்களுடைய முயற்சிக்கு பனை ஆராய்ச்சி நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கும்.
- என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வை நோக்கி நகரவேண்டும்

கடல் எல்லையைத் தாண்டிய இந்திய மீனவர்களைக் கைது செய்தபோது நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்திருக்கின்றனர். இந்தச் சம்பவம் மீனவர் பிரச்சினையில் மீண்டும் புதிய பதற்றத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

மீனவர்கள் சுடப்பட்டதற்கு இந்தியா தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றது. எல்லை தாண்டும் மீனவர்களைப் பரிவுடனும் மனிதாபிமான அடிப்படையிலும் அணுகவேண்டியதன் அவசியத்தை இந்திய மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது.

புதுடில்லியில் உள்ள இலங்கையின் பதில் உயர் ஆணையர் நேற்றுக் காலை இந்திய அயலுறவுத்துறை அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இச்சம்பவம் தொடர்பான இந்திய அரசின் கடுமையான எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

"வாழ்வாதாரம் தொடர்பான அக்கறையினை கவனத்தில் கொண்டு மீனவர்கள் விவகாரத்தினை பரிவுடனும் மனிதாபிமான அடிப்படையிலும் அணுகவேண்டியதன் அவசியத்தை இந்திய ஆளும்தரப்பு எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்காரணத்துக்காகவும் பலத்தை பயன்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பாக இரு நாடுகளினதும் ஆளும்தரப்புக்களுக்கும் இடையில் ஏற்கனவே உள்ள புரிந்துணர்வுகள் மிகவும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படவேண்டும்" என்று இந்தியா தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்களைக் கைது செய்ய முயன்றபோது, அவர்களின் படகிற்குள் கடற்படையினர் நுழைய விடாமல் தடுத்து தாக்கினர் என்றும் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியை அவர்கள் பறிக்க முயன்றபோது அது வெடித்ததிலேயே காயம் ஏற்பட்டது என்றும் கடற்படை விளக்கமளித்துள்ளது. இந்தச் சம்பவத்திற்குப் பின்னரும் இலங்கை எல்லையைத் தாண்டும் இந்திய மீனவர்களைக் கைது செய்யும் தமது பணி தொடரும் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்களின் எல்லை மீறலால் இலங்கையின் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாகப் பாதிக்கப்படும் நிலை காணப்படுவதால் இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படுவது மிக அவசியம். இந்திய மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடியை நோக்கித் திசை திருப்புவதே இதற்கான தீர்வாக இருக்கமுடியும் என்று இரு நாடுகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் இனங்காணப்பட்ட தீர்வை இந்திய மத்திய அரசு நடைமுறைப்படுத்துவதே பாக்குநீரிணைப் பகுதியில் பதற்றத்தைக் குறைப்பதற்கு வழியை ஏற்படுத்தும்.

எல்லை மீறும் இந்திய மீனவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படவேண்டும் என்பதிலும் அவர்களும் வாழ்வாதாரத்தைத் தேடித்தான் எல்லை தாண்டுகிறார்கள் என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால், அதுவே எல்லை தாண்டுதல் நிறுத்தப்படாமல் தொடர்வதற்கான காரணமாக அமையக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவது இந்திய அரசினதும் பொறுப்பு. எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டும் என்று எதிர்பார்ப்பதைப் போன்றே இந்திய மீனவர்கள் எல்லைதாண்டாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு இந்தியக் கடற்படைக்கு இருக்கின்றது என்பதையும் புதுடில்லி ஞாபகத்தில்கொள்ளவேண்டும். இந்தியக் கடற்படை தமது பொறுப்பிலிருந்து தவறுவதே இத்தகைய அசம்பாவிதங்களுக்கும் விரும்பத்தாக நிகழ்வுகளுக்கும் காரணமாகின்றன என்பதையும் புதுடில்லி புரிந்துகொண்டு செயற்படுவதே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையாக இருக்கும்.

இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் இறநந்தார் என்பதால் அதீத எச்சரிக்கையும் பாதுகாப்பு உணர்வும் கொண்டிருக்கும் இலங்கைக் கடற்படையினர், அப்பாவி இந்திய மீனவர்களின் மீது தமது பலத்தைப் பயன்படுத்துவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்திய எல்லையை அவர்கள் தாண்டுவதைத் தடுப்பதற்கான பொறிமுறையை இந்திய அரசு ஏற்படுத்தத் தவறிய நிலையில் அவர்கள் எல்லை தாண்டுவதை வாழ்வாதாரப் பிரச்சினையாக அணுகி அவர்களைக் கையாள்வதற்கான பொறுமையை அவர்கள் கொண்டிருப்பதும் அவசியம். தாம் கைது செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் கூலிக்காக மீன்பிடிக்க வருபவர்கள் என்பது கடற்படையினருக்கும் தெரியும். எனவே பொறுப்புடன் நடப்பது அவசியம். கடலில் வேண்டத்தகாத சூழலை ஆயுதங்கள் இன்றிக் கையாள்வதற்கான பயிற்சியும் ஆலோசனைகளும் அவர்களுக்கு வழங்கப்படுவதில் இலங்கைக் கடற்படையும் அக்கறை செலுத்தவேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் ஒரு பதற்றமான சூழலில் தொடர்வதைத் தடுக்கமுடியும்.

## கற்பிட்டி பிரதேச சபையின் ஏற்பாட்டில் கிளீன் சிறி லங்கா வேலைத்திட்டத்தில் கற்பிட்டி பிரதான வீதியில் சிரமதானம்

(சியாஜ்)

கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையால் முன்னெடுக்கப்படும் கற்பிட்டி தொடக்கம் பாலாவி வரையான பிரதான பாதையின் இரு ஓரங்களில் பாரிய சிரமதான வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கல ராமநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஜே.எம் பைசல், தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் நிமல் பத்திரண, கற்பிட்டி கடற்படைத் தளபதி, கற்பிட்டி , கண்டக்குளி சிவில் பாதுகாப்பு பிரிவினர், நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள். கற்பிட்டி பிரதேச செயலாளர், உட்பட உத்தியோகத்தர்கள், கற்பிட்டி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு கழக வீரர்கள், நலன்விரும்பிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கற்பிட்டி தொடக்கம் பாலாவி வரையிலான பிரதான வீதியின் இரண்டு பக்கங்களையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் வேலைத்திட்டத்திற்கு நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் இரு குழுக்கள் பிரிக்கப்பட்டு நுரைச்சோலையிலிருந்து பாலாவி வரை வீதியோர சிரமதான பணியை மேற்கொள்வதற்கு ஒரு குழுவும் மற்றைய குழு நுரைச்சோலையிலிருந்து கற்பிட்டி வரை வீதியோர சிரமதான பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவன பிரதிநிதிகள் கல்முனைக்கு வருகை

(சகா தேவராஜா)

சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவன பிரதிநிதி எஸ்.முரளி கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தலைமையிலான குழுவினர் அவரை வரவேற்று அவர்களின் அமைப்பால் முன்னெடுக்கப்படும் திட்டங்களைக் காண்பித்தார்.

பிரதிநிதி முரளி அவற்றை நேரில் மதிப்பாய்வு செய்தார். அவர்களால் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீரிழிவு மையம், குழந்தைகள் விடுதி பூங்கா மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் எலும்பியல் பிரிவுக்கான உபகரணங்கள் என்பனவற்றின் உயிர்ப்பான இயக்கம் பற்றி திருப்தி தெரிவித்தார்.

விஜயத்தின் போது பயனாளிகள் மற்றும் நிர்வாக குழுவினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்த ஒத்துழைப்பு தற்போதுள்ள திட்டங்களில் மேலும் மேம்பாடுகளுக்கு வழிவகுக்கும் மற்றும் எதிர்காலத்தில் ஐஎம்எச்ஓ உடன் புதிய திட்டங்களைத் தொடங்க வழி வகுக்கும் என்று பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

## சாய்ந்தமருதில் தொழுநோய் விழிப்புணர்வு ஊர்வலமும் துண்டறிக்கை விநியோகிப்பும்

(ஸாகிர்)

சர்வதேச தொழு நோயாளர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் தொழுநோய் விழிப்புணர்வு ஊர்வலமும் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கும் நிகழ்வும் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற இப்பிரதான ஊர்வலம், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இருந்து பிரதான வீதியூடாகச் சென்று, மாளிகைக்காடு, சாய்ந்தமருது போன்ற பிரதேங்களில் பிரதான வீதியூடாக வந்த வாகனங்களில் பயணித்த பிரயாணிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள், ஸ்டிக்கர் போன்றவையும் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய தொற்றுநோய்ப் பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சி.எம். பசால் கலந்துகொண்டார்.

இதன்போது வைத்தியசாலைத் தாதிமார்கள், வைத்தியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## உணவகம் மற்றும் பூட்சிற்றி உரிமையாளர்களிற்கு நல்லூரில் ரூபாய் 2 லட்சத்து 67 ஆயிரம் தண்டம்

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை, வழிகாட்டலில், பண்டிகைகாலத்தை முன்னிட்டு உணவகங்கள், பூட்சிற்றிகள் என்பன தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் கடந்த 07.01.2025, 10.01.2025 ஆம் திகதிகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது திருநெல்வேலி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சமையல் செய்வதற்காக திகதி காலாவதியான பொருள்கள், சுட்டுத்துண்டு இன்றிய பொருள்கள் பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டு, மேற்படி பொருள்கள் கைப்பற்றப்பட்டதுடன் பாற்பண்ணை பகுதியில் அமைந்துள்ள பூட்சிற்றியிலும் ஏராளமான திகதி காலாவதியான பொருள்கள், சுட்டுத்துண்டு இன்றிய பொருள்கள் பொது சுகாதார பரிசோதகரால் கைப்பற்றப்பட்டன.

மேற்படி உணவக, பூட்சிற்றி உரிமையாளர்களிற்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் 20 ஆம் திகதி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகளை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதிவான் செ. லெனின்குமார் உணவக, பூட்சிற்றி உரிமையாளர்களிற்கு முறையே 120,000 ரூபா, 147,000 ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்’ நூல் அறிமுக நிகழ்வு உசன் மகா வித்தியில்

(சுபேசன்)

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ’21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்’ என்ற நூல் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்/உசன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

உசன் இராமநாதன் முன்பள்ளியின் ஆண்டு விழா மற்றும் கால்கோள் நிகழ்வில் இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளரும்-நூலின் பதிப்பாசிரியருமான ந.சச்சிதானந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த நிலையிலேயே அவர் மேற்படி நூலை முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத்தலைவர் இ.சுரேனிடம் வழங்கி அறிமுகம் செய்து வைத்திருந்தார்.

அத்துடன் இதன்போது சபையில் இருந்த அனைவருக்கும் இலவசமாக பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

மேற்படி நூலானது தேசிய மட்டத்திலான முன்பிள்ளைப் பருவ கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறை, பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு, வடமாகாண முன்பள்ளித்துறையின் இன்றைய நிலை,முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பிலான அடிப்படை தொழில் சட்டங்கள்,

வாய்மொழிமூல ஆங்கிலப்பயன்பாட்டை வலுப்படுத்தல், எதிர்கால மனித மூலதனமும்-பொருளாதார நெருக்கடியும்,

முன்பிள்ளைப் பருவ விருத்திச் செயற்பாடுகள் மற்றும் 21ஆம் நூற்றாண்டில் கல்வியும் நவீன தொழில்நுட்பமும் எனப் பல ஆக்கங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருக்கள்மடத்தில் விழாக்கோலம் பூண்ட பிரதேச பொங்கல் விழா

(சகா தேவராஜா)

களுவாஞ்சிக்குடி மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் மிகவும் பிரமாண்டமான தைப் பொங்கல் பெருவிழா மிகவும் சிறப்பாக திங்கட்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் மூன்று கட்டங்களாக கோலாகலமாக இவ் விழா பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.

கலாசார விழுமியங்களுடன் பண்பாட்டு பவனியாக கொண்டுவரப்பட்ட நெற்கதிர்கள் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தை அடைந்ததும் சமய வழிபாடுகளுடன் பாரம்பரிய முறையில் உப்பட்டி அடித்து பொலிதூற்றப்பட்டு பின்னர் நெல் குற்றப்பட்டு பொங்கல் பானையில் புத்தரிசியிடப்பட்டு நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாகின.



## செட்டிகுளம் பிரதேச செயலக ஏற்பாட்டில்

# பாடசாலைக்கு மத்தியஸ்தம் செயற்திட்ட விழிப்புணர்வு நிகழ்வு வவுனியாவில்

பாடசாலைக்கு மத்தியஸ்தம் என்ற தொனிப் பொருளில் மத்தியஸ்தர் சபை தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம் வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் மத்தியஸ்தர் சபை உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் எம்.எம்.அன்பஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நீதி அமைச்சின் கீழ் உள்ள மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவால் நாடு பூராகவும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில், பாடசாலைக்கு மத்தியஸ்தம் என்ற தொனிப் பொருளில் மத்தியஸ்தர் சபை தொடர்பான விழிப்புணர்பு செயற்திட்டத்தை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வவுனியா, சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகவித்தியாலயத்தில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வும் அது தொடர்பான செயற்பாடுகள் தொடர்பிலும் பயிற்சி அரங்கு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான மயூரதன், பவ்மியா, செட்டிகுளம் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிருந்தா ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வைத்தனர். இப்பயிற்சி செயற்திட்டம் மூன்று தினங்களுக்கு இடம்பெறும்



காலைக்கதிர் Kalaikkathir

# அரிசித் தட்டுப்பாடு, விலையேற்றத்திற்கு கடந்த கால ஆளும்தரப்புக்களே காரணம்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

கடந்த காலத்தில் இருந்த அரசாங்கங்கள் இவ் நெல்வினை சேமித்து வைத்து உரிய பொறிமுறையின் கீழ் மக்களிற்கு அரிசியினை விநியோகிப்பதற்கான செயன்முறையினை மேற்கொண்டிருந்தால் இவ்வகையான தட்டுப்பாடுகளும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டிருக்காது. எதிர்வரும் காலங்களிலே இவ்வகையான தட்டுப்பாடு ஏற்படாது என்பதுடன், அதற்கான நடவடிக்கையினை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் நாடாளுமன்றம் செல்கின்ற நாள்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களிலே ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்திலே எங்களது பிரசன்னம் இருக்கும். இந்நாள்களிலே மக்கள் தங்களுடைய குறைகளினை இங்கு வந்து எம்மிடம் தெரிவித்துக் கொள்ள முடியும்.

பொதுவாகவே அரசாங்கத்தின் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற கருத்து மக்கள் மத்தியிலே காணப்படுகின்றது. என்றாலும் கூட எமது இந்த ஐந்து வருட ஆட்சிக் காலத்தினுள் எங்களால் தெரிவிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் முழுமையாக நிவர்த்தி செய்யப்படும்.

குறிப்பாக நாம் ஆட்சியமைத்து மூன்று மாத காலப்பகுதிக்குள் நாம் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் படிப்படியாக பல்வேறுபட்ட விடயங்களைதீர்த்துவைத்துக்கொண்டுஇருக்கின்றோம்.

முப்பது வருட காலமாக ஏற்பட்ட மலையளவான பிரச்சினைகளை ஒரு குறிப்பிட்ட சில வாரங்களிலோ அல்லது குறிப்பிட்ட சில மாதங்களிலோ தீர்த்து வைப்பது என்பது எம்மாலும் முடியாது யாராலும் முடியாது.

மேலும் அரசின் மீது தேங்காய் விலை மற்றும் அரிசி விலை அதிகரித்துள்ளதாக ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. நாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களே ஆகின்ற நிலையில் அரிசி விலை தொடர்பாக எம்மிடம் கேட்கப்படுகின்றது. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கங்கள் இவ் நெல்வினை சேமித்து வைத்து உரிய பொறிமுறையின் கீழ் மக்களிற்கு அரிசியினை விநியோகிப்பதற்கான செயன்முறையினை மேற்கொண்டிருந்தால் இவ்வகையான தட்டுப்பாடுகளும், விலை அதிகரிப்பும்




ஏற்பட்டிருக்காது.

எதிர்வரும் காலங்களிலே இவ்வகையான தட்டுப்பாடு ஏற்படாது என்பதுடன், அதற்கான நடவடிக்கையினை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம். இதுவரை காலமும் குறிப்பிட்ட ஐந்து, ஆறு பாரிய வியாபாரிகளினாலேயே அரிசி விலை தீர்மானிக்கப்பட்டு வந்ததன் விளைவினை நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம்.

எதிர்காலத்திலே இவ்வாறான விடயங்கள் இடம்பெறாது. இதற்கான சகல முன்னாயத்தங்கள் அனைத்தையும் நாம் செய்திருக்கின்றோம், என்பதுடன் அதில் இருந்து மீண்டு எழுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

குறிப்பாக வன்னியிலே காணிப்பிரச்சனை பாரியளவில் காணப்படுகின்றது. எனவே இதனை தீர்க்கும் முகமாக தொடர்ச்சியான கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றோம். கடந்த வாரம் கூட சுற்றாடல் அமைச்சரினை சந்தித்து வன வள திணைக்களம், ஏனைய திணைக்களம் தொடர்பான முறைப்பாடுகளினை மேற்கொண்டிருக்கிறோம். அத்துடன் குறித்த திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடி இருக்கின்றோம். அதன் அடிப்படையில் எதிர்வரும் காலத்திலே அதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதாக வாக்குறுதி வழங்கியுள்ளனர்.

எனவே மக்களிற்காகவே நாம் இந்த ஆட்சியினை அமைத்துள்ளோம் என்பதுடன் இவ் ஆட்சி பயனுள்ள ஆட்சியாக அமையும் என்பதை மக்கள் நம்ப வேண்டும். குறிப்பாக நாம் ஆட்சி அமைத்து மூன்று மாதங்கள் ஆகின்ற நிலையில் வரும் ஒரு வருட காலத்தில் நீங்கள் எதிர்பார்த்த நிலைமையினை ஓரளவிற்கேனும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்தார்.

100

# மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் 5ஆம் ஆண்டு நினைவேந்தல்

(ஸாகிர்)

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஆதரவில், ஏ.ஆர்.எம். அட்வடைஸிங் அனுசரணையில், சிரேஷ்ட ஒலி/ஒளிபரப்பாளர் அறிவுக்களஞ்சியப் புகழ் அதிபர் மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் 05 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் றிஸாலத் ரீவியின் சேவை விஸ்தரிப்பும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சாய்ந்தமருது அல்ஹிலால் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும்.

ஒலி/ஒளிபரப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவருமான யூ.எல். யாக்கூப் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், அரசமைப்பு பேரவை உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்திக்குழு தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். உதுமாலெப்பை, அஷ்ரப் தாஹிர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிகளாகவும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜே. லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்,

மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம். ஹனீபா, கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், கல்முனை மெடிலேண்ட் வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ. அஸீஸ், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், அம்பாறை பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், அ.இ.ம.கா கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.எம்.ஏ. றஸாக் (ஜவாத்), முன்னாள் சட்ட ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும், பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம். சலீம், முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் கவிஞர் எம்.எம்.எம். பாஸில், பிறை எப்.எம். பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், சிரேஷ்ட ஒலி/ஒளிபரப்பாளர் ஏ.எம். தாஜ், கவிஞரும், சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான ஊடகவித்தகர் எஸ்.ரபீக், சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ். முபாறக், சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார், திருகோணமலை ஓ.ஐ.சி எம்.எஸ்.நஜீம், ஐ.சீ.எச்.எஸ். தவிசாளர் எம்.ஏ. அஹமட் நிப்ராஸ் ஆகியோர் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தமிழ்ச்சேவை தென்றல் அலைவரிசையின் அறிவிப்பாளரும் செய்தி வாசிப்பாளருமான எம்.எஸ்.எம். பஹ்றுதீன் நிகழ்வில் நிகழ்ச்சித் தொகுப்பை மேற்கொள்கிறார்.






# இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்துக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வரவேற்பு

கனடாவில் இருந்து வருகைதந்துள்ள ஈழத்தின் முன்னணி பாடகர் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்துக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திங்கட்கிழமை காலை வரவேற்பு அளிக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை ஆசிரிய மாணவர் இ.செந்தூர்ச் செல்வன் முன்னிலைப்படுத்தினார்.

கலாசாலையில் முதலாவது இசையாசிரியர் அணியில் பயிற்சி பெற்ற தனது அனுபவங்களை பொன் சுந்தரலிங்கம் எடுத்துக் கூறினார். அத்துடன் கலாசாலையை வாழ்த்தி பாடல் ஒன்றையும் இயற்றி பாடினார்.

கலாசாலை சமூகத்தின் சார்பில் பொன் சுந்தரலிங்கத்தை கலாசாலை முகாமைத்துவக் குழுவினர் கௌரவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கல்லடிப் பாலத்தில் சுவாமி விபுலானந்தருக்கு மாமல்லபுரத்தில் செய்யப்பட்ட கருங்கல் சிலை



(சகா தேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின்துறவறநூற்றாண்டு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் பூரண ஏற்பாட்டில் ,மட்டக்களப்பு கல்லடி பாலத்தில், இந்திய மாமல்லபுரத்தில் செதுக்கிய கருங்கல்லாலான சுவாமி விபுலானந்த அடிகளாரின் திரு உருவச்சிலை நிறுவப்படவிருக்கிறது.

அதற்கான அடிக்கல் நாட்டு விழாகடந்தஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ முன்னிலையில்சுபவேளையில் அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றது .

அடிகளாரின் சிலையானது தனி ஒரு கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட உள்ளது. இதற்கான பூரண ஏற்பாடு அனைத்தும் இந்தியாவில் மாமல்லபுரத்தில் திறமை வாய்ந்த தமிழ் நாட்டு சிற்பிகளால் செதுக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் இருக்கிறது .

உலகில், சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு தனிக் கருங்கல்லில் சிலை எழுப்பப்படுவதும், கல்லடிப்பாலத்தோடு நெருங்கிய பாடும்மீன் நீரரமகளிர் வரலாறுடைய மண்ணின் மைந்தருக்கு கல்லடிப் பாலத்தில் சிலை எழுப்பப்படுவதும் இதுவே முதல் தடவையாகும்.

அடிகளாரின் சிலை அமைப்பு செயற்குழுவின் தலைவரான மட்டக்களப்பின் பிரபலவர்த்தகரான தேசபந்து முத்துக்குமார் செல்வராஜா அதற்காக தற்போது இந்தியா சென்றுள்ளார்.

மட்டக்களப்பு நூற்றாண்டு விழாச் சபைத்தலைவர் கே. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் கனடா விபுலானந்த கலா மன்ற தலைவர் கே. புருசோத்தமன் , கலாமன்ற செயலாளர் நித்தி சிவானந்தராஜா ஆகியோரும் கனடாவில் இருந்து வந்து கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும், காயத்ரி பீட குருக்கள் சிவயோக செல்வன் சாம்பசிவம் , அடிகளாரின் சிலை அமைப்பு செயற்குழுவின் தலைவர் தேசபந்து மு. செல்வராசா , செயலாளர் ச. .ஜெயராஜா , உதவி பொது செயலாளர் தி. சரவணபவன் ,இணைச் செயலாளர் ச. சந்திரகுமார் , உப தலைவர் திருமதி . ஹறி . திலகவதி ஆகியோரும் அடிக்கல் நடும் நிகழ்வில் பங்கேற்றனர் .





மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ. வாசுதேவன் , மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் தனஞ்செயன் ஆகியோரும் அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டனர் .

அத்தோடு அடிகளாரின் பற்றாளர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிட்ட சட்ட மாஅதிபர் திணைக்களம், குறித்த அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய சம்பவங்களுடன் தொடர்பு பட்டுள்ளதாகவிடயங்கள்வெளிவருவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது

## துப்பாக்கிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை சிறு காயங்களுக்குள்ளான ஏனைய மூன்று மீனவர்களுக்கும் அதற்காக சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் மீனவர்களைப் பார்வையிட்ட யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல்காரியாலய அதிகாரிகள், அவர்களை நலன் விசாரித்து அவர்களது தேவைகள் குறித்து அறிந்துகொண்டு மீனவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்குமான சகல சாத்தியமான உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

புதுடில்லியில் உள்ள இலங்கையின் பதில் உயர் ஆணையர் இன்று காலை இந்திய அயலுறவுத்துறை அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இச்சம்பவம் தொடர்பாகக் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொழும்பில் உள்ள எமது உயர் ஆணையகம் இவ்விடயம் தொடர்பாக இலங்கை அயலுறவுத்துறை அமைச்சின் கவனத்துக்கு கொண்டுசென்றுள்ளது.

வாழ்வாதாரம்தொடர்பானஅக்கறையினை கவனத்தில்கொண்டு மீனவர்கள் விவகாரத்தினை பரிவுடனும் மனிதாபிமான அடிப்படையிலும் அணுகவேண்டியதன் அவசியத்தை இந்திய ஆளும்தரப்பு எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்காரணத்துக்காகவும் பலத்தைபயன்படுத்துவதனைஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பாக இரு நாடுகளினதும் ஆளும்தரப்புக்களுக்கும் இடையில் ஏற்கனவே உள்ள புரிந்துணர்வுகள் மிகவும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றுள்ளது.

## சிப்பாயின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவானவைவடக்குகடற்படைகட்டளை தலைமையகத்தினால்கண்காணிக்கப்பட்டன. குறித்த மீன்பிடிப்படகுகளை நாட்டின் கடல் எல்லையிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான விசேட சுற்றிவளைப்பினை வடக்கு கட்டளைக்குரிய கப்பல்கள் முன்னெடுத் திருந்தன.

இதன்போது சட்ட விரோதமாக மீன்பிடித்த 13 இந்திய மீனவர்கள் ஒரு மீன்பிடிப்படகுகளுடன்கைதுசெய்யப்பட்டனர். இந்திய மீன்பிடிப் படகினை கடற்படையினர் கைது செய்யவிருந்தபோது, அப்படகு கடற்படையின் சட்டப்பூர்வ உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாமல், தொடர்ந்து இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளது. இதனால் குறித்த படகில் சில கடற்படையினர் இறங்கியுள்ளனர்.

இதன்போது தமது படகிற்குள் கடற்படையினர் ஏறுவதைத் தடுப்பதற்காக, அவர்களது கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கடும் எதிர்ப்பினை வெளியிட்டதோடு குறித்த இந்திய மீனவர்கள் மிகவும்ஆக்ரோஷமாகவும்ஒழுக்கமின்றியும் நடந்துகொண்டனர். கடற்படையினருக்குள்ள அதிகாரத்துக்கமைய அவர்கள் குறித்த படகில் இறங்கியபோது இந்திய மீனவர்கள் குழுவாக அவர்கள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

கடற்படையினரின்உயிருக்குஅச்சுறுத்தல் ஏற்படும்வகையில், கடற்படையினரிடமிருந்து துப்பாக்கியையும் அவர்கள் பறிக்க முயற்சித்துள்ளனர். இதன்போது அந்தத் துப்பாக்கி இயங்கியதாலேயே இரு மீனவர்கள் சிறு காயமடைந்தனர். அவர்களுக்கு கடற்படையினரே முதலுதவியளித்து, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுத்தனர்.

அந்த மீனவர்கள் நிலைமை கவலைக்கிடமானதாக இல்லை என யாழ் போதனா வைத்தியசாலை உறுதிப்படுத்தியுள்ளதோடு, கடற்படையால் சம்பவம்தொடர்பில்காங்கேசன்துறைபொலிஸ் நிலையத்திலும்முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்ட மீன்பிடிப்படகுடன் எஞ்சிய 11 மீனவர்களும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு நேற்று செவ்வாய்கிழமை காலை அழைத்து வரப்பட்டனர். அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகயாழ்ப்பாணம்மயிலிட்டி கடற்வள ஆய்வாளர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்ட விரோத மீன்படி நடவடிக்கைகளைத் தடுத்து வடக்கு கடல் பிராந்தியத்தில் கடல் வளத்தின் பாதுகாப்பிற்கும், வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கை கடற்படை தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது என்றுள்ளது.

## மாணவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளதை அடுத்து இன்று பேரவைக் கூட்டத்திற்கு அவசர அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

பேரவையின் முடிவு தெரியும் வரை விரிவுரைகளைப் புறக்கணிக்கும் தமது போராட்டம் தொடரும் என்று ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டவர்கள் மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதை அடுத்துக் கூடிய பல்கலைக்கழகப் பேரவை, அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து அவர்கள் மீதான தண்டனையை மீளப்பெறுவது என்று தீர்மானித்தது. இதனை அடுத்து மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கலைப் பீடாதிபதி ரகுராம் பதவி விலகினார். இதனால் பல்கலைக்கழகத்தில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டது. மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளை உரிய நேரத்தில் சரிவர மேற்கொள்ளாது நிர்வாகம் விடும் தவறுகளைக் கண்டித்து, அதற்குக் காரணமானவர்களை உடனடியாகத் தண்டிக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஆசிரியர் சங்கம் விரிவுரைகளைப் புறக்கணிப்பதாக அறிவித்து.

அதற்கிடையில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தவறு செய்தவர்கள், போதைப் பயன்பாடு, பாலியல் செயற்பாடுகள் பல்கலைக்கழகத்தில் இடம்பெறுகின்றன, இவற்றுக்கு எதிராகத் தாங்கள் சாத்வீக வழியில் போராடப் போகிறார்கள் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு எதிராக நிர்வாக ஒத்தோடிகள் சிலர் மாணவர்களின் போராட்டத்தைத்திசைதிருப்பித்திரித்துஅதனை வேறுவிதமாகக் கொண்டு செல்கிறார்கள் என்று பல்கலைக்கழத்தின் 8 பீடங்களினதும் மாணவர் ஒன்றியத்தலைவர்கள் இணைந்து அறிக்கை விட்டார்கள்.

இந்தப் பின்னணியில் நேற்று பல்கலைக்கழகத் துணைவேந்தர், ஏற்கனவே தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் பேரவை முடிவின் அடிப்படையில் எச்சரித்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு மீண்டும் வகுப்புத் தடை விதித்துள்ளார். மேலதிகமாக வேறு சில மாணவர்களுக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கலைப்பீடாதிபதி தொடர்பில் சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவித்த மாணவர் ஒருவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தரின் இந்த முடிவு இன்றைய பேரவைக் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டால் அதன் பின்னர் தமது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தாம் சிந்திப்போம் என்று மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# மாகாண சபைகளுக்கான நிதியை பங்கிடும் பரிந்துரைக்கு அனுமதி

அரசமமைப்பிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமையமாகாணசபைகளுக்குத்தேவையான வளத் தேவைகள் தொடர்பாகவும், மாகாண சபைகளுக்காக தேசிய பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதிக் கொடைகள் ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் ஒதுக்கீடு செய்து வழங்கும் கோட்பாடு தொடர்பாகவும் விதந்துரைகளைச் சமர்ப்பிக்கும் பணி நிதி ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒவ்வொரு மாகாண சபைக்காகவும் 2025 ஆண்டின் வரவு - செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்து வழங்குவதற்காக நிதி ஆணைக்குழுவால் விதந்துரை செய்யப்படும் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுத் தேவைகள் அடங்கிய அறிக்கை மேற்குறித்த ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலேகுறிப்பிடப்பட்டுள்ளவிதந்துரைகளை அமுல்படுத்துவதற்கும், அரசமைப்பின் 154ஈ(7) ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய குறித்த விதந்துரைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# சமாதான நீதிவானாக அறபாத் பதவியேற்பு

மாவடிச்சேனை, பஸீர் வீதியைச்சேர்ந்த முஹம்மது நஸீர் முஹம்மது யஸீர் அறபாத் தீவு முழுவதிற்குமான நீதிவானாக நேற்று(செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதிஎச்.எம்.முஹம்மட் பஷீல்முன்னிலையில்சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தென்கிழக்கு பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரியும், மாவடிச்சேனை மஸ்ஜித் மஸீத் ஸாலிஹ் அல் மஸீத் பள்ளிவாயலின் செயலாளரும் பத்தி எழுத்தாளரும் இளம் சமூகச்செயற்பாட்டாளருமாவார்.

மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலயம் மற்றும் ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) என்பவற்றின் பழைய மாணவரான இவர் முஹம்மது நஸீர், மர்ஹூமா பாத்திமா தம்பதிகளின் புதல்வருமாவார்.

# புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகராக கல்முனை பிராந்தியத்தில் இப்னு அசார்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனைபிராந்தியத்திற்கான புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகராக பாலமுனை யைச்சேர்ந்த உதுமாலெவ்வை மஹ்மூத்கான் இப்னு அசார் கடந்த 2025.01.24 அன்று கடமையை பொறுப் பேற்றுக்கொண்டார்.

ஏற்கனவே கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த ரீ.எச்.டி.எம்.எல். புத்திக கொழும்பு பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை தொடர்ந்து எழுந்த வெற்றிடத்திற்கு புதிதாக அவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்தனது ஆரம்பகல்வியை தரம் 01 தொடக்கம் 05 வரை பாலமுனை அல்ஹிதாயா வித்தியாலயத்திலும் 06-07 வரை பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்திலும் 08 தொடக்கம் உயர்தரம் வரை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையிலும் கற்றார்.

1989 இல் உப பொலிஸ் பரிசோதகராக இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து 2002 வரையும் கல்முனை வெல்லாவெளி தெஹிவளை, கண்டி ஆகிய பொலிஸ் நிலையங்களில் உப பொலிஸ் பரிசோதகராகவும் இடைப்பட்ட காலத்தில் யுத்த பிராந்தியபயிற்சிவிசேடபடை பொறுப்பதிகாரியாகவும் சேவையாற்றினார்.

பின்னர் 2002-2013 வரை பொலிஸ் பரிசோதகராக அம்பாறை மத்திய முகாம் அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை பொலிஸ் தலைமையகம் கொம்பனித்தெரு ஆகிய பொலிஸ் நிலை யங்களில் சேவையாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார்.

பின்னர் 2013-2016 வரை பிரதான பொலிஸ் பரசோதகராக அம்பாறை, பொத்துவில், சம்மாந்துறை பொலிஸ் நிலையங்களில் சேவைபுரிந்ததோடு அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் கல்முனை பிராந்திய விசேட குற்றப்பு லனாய்வுப் பிரிவின் பொறுப் பதிகாரியாகவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகபொலிஸ்வளாக பொறுப்பதிகாரியாகவும் சேவையாற்றினார்.

அத்துடன் அம்பாறை மாவட்டம் பாலமுனை பகுதியில் இருந்து இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட முதல் உப பொலிஸ் பரிசோதகர் முதல் பொலிஸ் பரிசோதகர் முதல் பிரதான பொலிஸ் பரிசோதகர் எனும் சிறப்புகளுக்குரியவர் ஆவார்.

இது தவிர 2008 இல் அகில இலங்கை ஐக்கிய ஒன்றியத்தினால் சாமஸ்ரீ தேசமான்ய விருதுகளை பெற்றார். யுத்தகாலப்பகுதியில், யுத்தபிரதேசங்களில்கடமையில் ஈடுபட்ட சமயம் ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் கைப்பற்றியதன் பேரில் பொலிஸ்மா அதிபரால் 03 தடவைகள் பொலிஸ்மா அதிபர் விசேட விருதை பெற்றிருக்கின்றார்.

பொலிஸ் கூட்டுப் பயிற்சி மட்டுமன்றி விசேட யுத்த பயிற்சியும் பெற்றுள்ள இவர் யுத்த பயங்கரவாத முறியடிப்பின் போது காயங்களுக்குட்பட்டு நாட்டின் உடைமைகளை கைப்பற்றி சொத்துக்களை காப்பாற்றி வீர சாதனை படைத்தமைக்காக 2009 இல் தேசபுத்ரசம்மான விருதும் பெற்றிருந்தார்.

இதே வேளை நேர்மையாகவும் கண்ணியமாகவும் தனது கடமையை செய்யும் ஆற்றல் கொண்ட புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகரை பல்வேறு தரப்பினரும் பாராட்டுவதுடன் தமிழ் முஸ்லிம் சிங்களம் என்ற வேறுபாடு பாராது சகல மக்களின் மனதை வென்ற ஓர் உயர் பொலிஸ் அதிகாரி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாற்று திறனாளிகளை தொழிலில் இணைத்தல் திட்டத்தின் கீழ் திருமலையில் விருது வழங்கல்

(ஹஸ்பர்)

மாற்றுத் திறனாளிகளை தொழிலில் இணைத்தல் திட்டத்தின் கீழ் விருது வழங்கும் நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்றது.

குறித்த திட்டத்தினை சமூக சேவைகள் திணைக்களம், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் ஜப்பானிய நிதி நிறுவனமான ஜெயிக்கா ஆகியன இணைந்து மாற்றுத் திறனாளிகளை தொழிலில் இணைத்தல் எனும் திட்டத்தின் கீழ் வெற்றிகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்களுக்கான குறித்த விருதுகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஜீ.எம். ஹேமந்த குமார தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளை தொழிலில் உள்வாங்கி அவர்களுக்கான வாழ்வாதாரத்தை தாங்களே அமைத்து கொள்ளும் நோக்கமாக இத் திட்டம் காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 2024 ஆம் ஆண்டுக்காக சுமார் 17 மாற்றுத் திறனாளிகள் தொழிலில் இணைத்து கொள்ளப்பட்டு தற்போது உரிய பயனாளிகள் குறித்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பிரதேச செயலாளர்கள்,உதவி பிரதேச செயலாளர்கள், வெற்றிகரமாக தெரிவான மாற்றுத் திறனாளிகள், தொழில் வழங்குனர்கள், பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனித வள அபிவிருத்தி உத்திதோகத்தர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், துறை சார் உத்தியோகத்தர்கள், தொழில் வழங்குனர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தரம் 6 மாணவர்களுக்கு வரவேற்பு

(ஷினாஸ்)

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தரம் 6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம். ஹிர்பகான் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கோட்டக்கல்வி பணிப்பாளர் யு.எல் றியால் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அண்மையில் ஓய்வு பெற்ற யாழ் மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ரி. எல் அப்துல் மனாப் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் இரு மொழி கற்கைகள் இணைப்பாளர் திருமதி சம்பந்தன், ஷம்ஸ் மத்திய கல்லூரியின் ஊட்ட பாடசாலையான அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் பொறுப்பதிபர் எம்.எல்.ஏ .மஹ்றூப், உதவி அதிபர்களான முஹம்மட் சிராஜ், ஏ.கே.பாரிஸ், ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் எம்.பி அப்துல் ராஜி, உதவி அதிபர்களான திருமதி.ஏ.ஆர்.என்.மன்சூரா, திருமதி எம்.எஸ் முஹிஷா சர்முன், திருமதி எம்.ஐ.சர்மலா, எம்.ஏ.சித்தி நகிதா, உட்பட மாணவர்களின் பெற்றோர்கள் புதுமுக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தரம் 06 இல் புதிதாக இணைந்து கொண்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் புதுமுக மாணவர்களுக்கும் பாடசாலை நிர்வாகத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

நிகழ்வுகளை பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.ஜெ. தாரிக் தொகுத்து வழங்கினார்.



# மண் அகழ்வுப் பணிக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போது கடுமையாகச் சட்டத்தை பின்பற்றுக

## அதிகாரிகள் கூட்டத்தில் கிழக்கு ஆளுநர் பணிப்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஆகியோரின் தலைமையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாவட்டத்தின் பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ்,மேலதிக அரசாங்க அதிபர் எஸ் சுதாகரன், பிரதேச செயலாளர்கள், புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம், வனத்துறை, மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் துறை, காவல்துறை மற்றும் கடற்படை உள்ளிட்ட பொறுப்பான நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு முக்கிய தொழிலான மணல் அகழ்வு தொழிலுக்கு மணல் அகழ்வு அனுமதி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் மற்றும் சிக்கல்கள் குறித்து இந்தக் கலந்துரையாடல்கள் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

ஆளுநரும் பிரதி அமைச்சரும் தலையிட்டு, அந்த தாமதங்களுக்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை வழங்கினர்.

மேலும், மகாவலி ஆற்றின் குறுக்கே மணல் அகழ்வின் போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆளுநரும் பிரதி அமைச்சரும் அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்குத் தெரிவித்ததோடு, இதுபோன்ற பிரச்சினைகள் மீண்டும் ஏற்படாதவாறு கடுமையான விதிமுறைகளுடன் உரிமங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினர்.

# மூதூர் பிரதேச சபை செயலாளராக ஜெம்சித் கடமை ஏற்பு

(நூருல் ஹுதா உமர்)

மூதூர் பிரதேச சபையின் புதிய செயலாளராக எம் ஐ எம்.ஜெம்சித் செவ்வாய்க்கிழமை கடமை ஏற்றுக் கொண்டார் .

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக பல்வேறு அரசநிறுவனங்களில் நீண்ட காலம் சேவையாற்றி பல அனுபவமும் திறமையும் கொண்ட இவர், நேர்மை தவறாத உத்தியோகத்தர் ஆவார்.

இவரது கடமையேற்பு நிகழ்வில், மூதூர் வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எம். சிராஜ், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஹில்மி உட்பட நலன் விரும்பிகள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்

இதன் போது மூதூர் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் புதிய செயலாளர் வரவேற்றக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

# வனத்துறை திணைக்களம் கையகப்படுத்திய மக்களின் காணிகளை உடன் விடுவிக்கவும்

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குகதாசன் எம்.பி.

(ஹஸ்பர்).

திருகோணமலை மாவட்ட மொரவேவா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மொராவேவா பிரதேசச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மொறவெளபிரதேசசெயலாளர் ஆ.நாவேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற குறித்த கூட்டத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தலைமை தாங்கினார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் -

மொரவெளஜு பகுதியில் அமைந்துள்ள நாலாம் கண்டத்தில் உள்ள காணி உரிமையாளர்கள் தத்தம் காணிகளில் குடியமர நீண்ட காலமாக அனுமதிக்கப்படாமை பற்றியும் அவர்களை உடன் குடியமர்த்த ஆவன செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு ஆவன செய்வதாக உறுதி அளிக்கப் பட்டது.

பறையன்குளம் பகுதியில் அமைந்துள்ள எல்லைக் காளியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள காணிகளை வனத்துறை கையகப் படுத்தியுள்ளதாகவும் இவற்றை விடுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வனத்துறை அதிகாரிகள் மேலிடத்தோடு பேசி இது பற்றி அறியத் தருவதாகக் கூறினர்.

பன்மதவாச்சி ஊரில் வடிகால் வசதிகள் சரியாக இல்லை என்றும் இதன் காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுவதாகவும் இதைத் தடுக்க வடிகால்களை மறுசீரமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதனடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரிகள் இதற்கு ஆவன செய்வதாகக் கூறினர்.

முதலிக் குளம் பாடசாலையில் பௌதீக வளங்கள் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இவற்றை நீக்க ஆவன செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இவற்றை தீர்க்க உடன் நடவடிக்கை எடுப்பதாக கல்வி திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர்.

மேலும் நொச்சிக் குளம், சாந்தி புரம், ஔவ்வை நகர் ஆகிய ஊர்களில் உள்ள வீதிகள் பழுதடைந்து உள்ளன எனவும் அவற்றை திருத்த ஆவன செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். இதற்கு ஆவன செய்வதாக கூறப்பட்டது.

# அதிபர்களுடன் கலந்துரையாடல்

(றிபாஸ்.)

நிந்தவூர் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரை சந்தித்து பல்வேறு விடயங்களை தொடர்பில் கலந்துரையாடினர்.

நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய கல்வியாண்டின் சவால்கள் குறித்தும், பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் வளப்பற்றாக்குறைகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளையும் கலந்தாலோசித்தனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2025இல் வெளியிடப்பெற்றது